# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## SUB JUDGE

## S.C. No. 182/ 2025

Deposition of witness for PW5

Name : நிருபன் சக்கரவர்த்தி

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.07.2026.

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் அய்யனார்குளத்தில் குடியிருந்து பி.எஸ்.சி வேதியியல் துறை படித்து முடித்ததுவிட்டு வேலை தேடி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆத்தாட்சியில் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து என்னுடையது இல்லை. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

நானும், உத்தப்பநாயக்கனூரை சேர்ந்த நடராஜன் மகன் தீலிப் என்பவரும் சொக்கதேவன்பட்டியில் பாண்டியம்மாள் என்பவரின் வீட்டின் முன்பு இருந்த போது அங்கு வந்த உசிலம்பட்டி வட்டக்காவல் ஆய்வாளர் மேற்படி வழக்கு சம்பந்தமாக எதிரி கணேஷ்வரி என்பவரை கைது செய்த விபரத்தை கூறி அவர் தாமாக முன் வந்து ஒப்புதல் வாக்குமூலம் கூறினார். ஆந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் பாலசந்தர் என்பவருக்கும் எதிரி காளிஸ்வரி என்பவருக்கும் 2009ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றும், அதன் பயமான இரண்டு குழந்தைகள் உள்ளது என்றும், எதிரி பாப்பாபட்டி அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றும், எதிரிக்கும் பாலசந்தர் என்பவருக்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு வந்தது என்றும், அவரை வெட்டி கொலை செய்தால் நான் நிம்மதியாக இருக்க முடியும் என்று கடந்த 08.06.2024ம் தேதி சுமார் 11.00 மணியளவில் எதிரி வீட்டில் இருந்த போது பாலசந்தர்

என்பவர் குடித்துவிட்டு போதையில் வந்து தகராறு செய்தார் என்றும், அதனை மனதில் வைத்துக்கொண்டு பாலசந்தர் தூங்கிய பின் அவரை வெட்டி கொலை செய்து விடவேண்டும் என்று நினைத்தும், அவர் தூங்கியதும் வீட்டில் மறைத்து வைத்திருந்த மீன் வெட்டும் கத்தியை வைத்து ஆபாசமாக பேசி, இதோடு செத்து தொலைடா என்று கத்தியால் வெட்டினார் என்றும், அப்போது பாலசந்தர் எந்திரிக்க முயற்சி செய்த போது எந்திரிக்க விடாமல் மாறி மாறி பலமுறை கத்தியால் வெட்டினார் என்றும், அவர் வீட்டின் கதவை திறந்து வெளியில் சத்தம்போட்ட போது அவர் அம்மா, அப்பா மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்த போது அவர்களையும் என் பக்கத்தில் வந்தால் உங்களையும் வெட்டி கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும், பின்னர் எனது கணவரை மருத்துவமனைக்கு தூக்கி சென்றார் என்றும், மேற்படி நபர்கள் சென்றதும், நான் எதிரி உடுத்திருந்த நைட்டியில் இரத்தக்கறை இருந்ததால், அதனையும் நான் வெட்டிய கத்தியையும் எனது வீட்டின் முன்பு உள்ள துளசிசெடிக்கு அருகில் யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துவிட்டு வீட்டையும் சுத்தம் செய்து விட்டு எனது சொந்த ஊரான சொக்கத்தேவன்பட்டியில் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டேன் என்றும், என்னை அழைத்து சென்றால் எனது கணவரை வெட்ட பயன்படுத்திய மீன் வெட்டிய கத்தியையும், இரத்தக்கறை படிந்த நைட்டியும் தங்களிடம் ஆஜர் செய்கிறேன் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தீலிபன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து போட்டுவிட்டு வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரிக்கும் தங்களை விசாரித்ததாக தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.16 11:57:06 +0530

Assistant Sessions Judge,
Usilampatti.